Minutes of Public Hearing conducted on 26.02.2026 at 11.00 A.M. at Chandirattiar Mahal, 7/153, Ambai Road, Kalathimadam, Alangulam Taluk, Tenkasi District with respect to the proposed Rough Stone and Gravel Quarry by Thiru. K.Prasadraju, over an extent of 5.99.05 Hect at S.F. No. 36/1, 36/2B, 36/4B2, 36/4C, 37/1B2, 37/1E of Maruthamputhur Part-1 village, S.F. No. 145/1C, 145/1D, 145/1E, 146/9E, 146/9F, 146/9G, 147/1, 147/2A, 147/2B, 147/3A, 147/3B, 147/4C, 147/5F, 147/5H, 147/8B, 147/9C and 148/1 of Maruthamputhur Part-2 village, Alangulam Taluk, Tenkasi District.

Details of participants in this meeting.

1.	Tmt. Vaishnavi Paul, I.A.S.	Sub Collector, Tenkasi.
2.	Tmt.S.R.Sangeeta,M,E.,	District Environmental Engineer,(FAC) Tamilnadu Pollution Control Board, Tenkasi.
3.	Thiru.M.Tamizh Selvan	Assistant Engineer, Office of District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Tenkasi.
4.	Selvi.M. Shanmugasree Revathi	Assistant Engineer, Office of District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Tenkasi.
3.	Public and Government Officials	Copy of Attendance (Annexure-II)

The Public hearing under EIA Notification, 2006 for the proposed Rough Stone and Gravel Quarry by Thiru. K.Prasadraju, over an extent of 5.99.05 Hect at S.F. No. 36/1, 36/2B, 36/4B2, 36/4C, 37/1B2, 37/1E of Maruthamputhur Part-1 village, S.F. No. 145/1C, 145/1D, 145/1E, 146/9E, 146/9F, 146/9G, 147/1, 147/2A, 147/2B, 147/3A, 147/3B, 147/4C, 147/5F, 147/5H, 147/8B, 147/9C and 148/1 of Maruthamputhur Part-2 village, Alangulam Taluk, Tenkasi District was conducted on 26.02.2026 at 11.00 A.M. at Chandirattiar Mahal, 7/153, Ambai Road, Kalathimadam, Alangulam Taluk, Tenkasi District.

The District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Tenkasi welcomed the Sub Collector, Tenkasi and everyone who have come for the public hearing. She informed that public notices were already published in "Dinamalar Tamil edition & The New Indian Express" English edition on 23.01.2026

and also announcement made to the public on 23.02.2026 through vehicle announcement and distributing pamphlets. Further she stated that the EIA consultant will present the details for the proposed quarry.

She also stated that the views, suggestions and queries of the public will be recorded through video-grapy and the same will be sent to the State Environment Impact Assessment Authority (SEIAA), Chennai.

Then the Environmental consultant started explaining the project of Thiru. K.Prasadraju Rough stone and gravel quarry to the public through a power point presentation. In between the presentation, few persons raised objections and there was a little hassle . Subsequently the Sub Collector, officials and police convinced them and the consultant continued the power point presentation.

Subsequently, the public started expressing their views with respect to the proposed quarry as follows.

1.Thiru.S.S.N. Baskar, Maruthamputhur:

He stated that when conducting a public consultation meeting regarding the quarry, it must be held in the village where the quarry is proposed to be established. He also said that the claim that publicity was done through pamphlets and announcements via auto-rickshaws is completely false. Further he stated that when the concerned Revenue Inspector was asked about the public hearing meeting, he said that he was unaware of it. He further mentioned that people were brought in by giving money. He also said that in the quarry, pits should be dug using a compressor, but instead they are using a bore vehicle to dig the pits. Because of this, cracks are appearing in the houses. Additionally, due to quarry work being carried out excessively, water scarcity is occurring in the village. He also questioned whether permission had been granted for drilling bore pits and that quarrying is carried out more than the prescribed depth.

Furthermore, he stated that although there are rules that vehicles should not be loaded beyond a specified limit, excessive loads are being carried in big vehicles, which causes serious damage to their village. Therefore, he requested that permission should not be granted.

2. Thiru. Serman Raja, Ward Member (1st Ward), Maruthamputhur

While expressing his opinion, Thiru. Serman Raja questioned why the public consultation meeting was being conducted at this location, which is about 5 km away, instead of holding it in the village where the quarry is proposed to be established. He also stated that no prior notice regarding the public consultation meeting had been given. He further said that the quarry operates for 24 hours a day and too many vehicles are coming from Kerala and that stones from quarries located in Tirunelveli district are also transported through their village. As a result, the roads are getting damaged. He mentioned that vehicles carry loads of about 50 to 60 tons. Due to this, a large amount of dust spreads on the roads, and the quarry owners do not use water sprinklers to control the dust. He also stated that the quarry owner has not provided any funds for providing infrastructure or for the school or for any public purpose in Maruthamputhur. He said that the quarry in operated for 24 hours and requested that its operation should be done during night time and not during day time.He requested that quarry owners be instructed to use water sprinklers to control dust on the roads. He pointed out that all the houses along the roadside are filled with dust and asked the Sub Collector to observe how much dust has accumulated even on the plants along the road. Therefore, he stated that basic amenities and infrastructure facilities were not done for the people. He also asked whether only the affected villagers shall express their views in the public consultation meeting or whether anyone can express their opinions. He requested that the public consultation meeting be conducted once again in Maruthamputhur and then only the resistance against the quarry will be known.

He also stated that groundwater is being affected. Earlier, good water was available within 100 feet, but now borewells have to be drilled deeper than 500 feet. He warned that within the next 15 years, their village may face water scarcity and hence people will move to other places. Further people cannot do any agriculture. He further mentioned that there are no canal irrigation facilities in their village, and without water it is impossible to carry out any farming. Their area depends entirely on rainfall, and water reaches the village tanks only when it rains and agriculture can be carried out with this water only. He said that the people of the village survive mainly through daily wage labour and not all people are farmers. He therefore requested

once again that the public consultation meeting be conducted in Maruthamputhur. At that time, if the people of their area express support, they would have no objection to grant permission for the quarry. Hence, he requested that the public consultation meeting be cancelled and conducted again within the jurisdiction of the Maruthamputhur Panchayat.

3. Thiru. Ganesan, Kasinathapuram

While expressing his opinion, Thiru. Ganesan stated that for the past three years, no raw material has been exported to the state of Kerala. He also mentioned that all the materials obtained from the quarry are being supplied only to the local market. He further stated that around 100 families are earning their livelihood from the quarry. Therefore, he requested that permission be granted for establishing the said quarry.

4. Tmt. Buma, Udayampuli

While expressing her opinion, Tmt. Buma stated that in any project there will always be both positive and negative aspects, and we should focus on taking the positive aspects. She said that we should also understand the methods to avoid or overcome the negative aspects and act accordingly. She further stated that her husband is working in the quarry for 7 years . She further mentioned that the quarry owners are properly using water sprinklers to completely control dust in the quarry, considering the welfare of the workers employed there. She also stated that the owners provide healthy food for the workers and labourers, keeping their well-being in mind. She added that owners who care about the welfare of their employees will also show concern for the areas where the quarry is located and the surrounding regions. She further stated that the quarry owners has allocated Rs. 5.0 lakhs for the development of the school in Maruthamputhur. She said that they would ensure that no harm is caused by the quarry. She also mentioned that planting tree sapling will suppress dust. She reiterated that every project has both benefits and drawbacks, and to see how to overcome the drawbacks.

She added that construction activities are currently taking place on a large scale, and if quarries like this are not there, where to buy the raw materials. She also

stated that the quarry does not export its products to any other states and that all the products are sold only within our State. Therefore, she requested that permission be granted for the proposed quarry.

5. Thiru. Mangan, Odaimarichan

In his speech, Thiru. Mangan stated that in any profession there will always be both advantages and disadvantages. He requested that the authorities carefully examine and assess what are the benefits and harms. He further said that only if necessary materials are produced in certain places can people build the houses they desire. He also mentioned that advertisement was there stating that toilets will be constructed for the government school. He requested that not only the government school but also the government-aided school in the village should be provided with the necessary facilities by the project management. Therefore, he requested that permission be granted for the quarry

6. Thiru. MahaVishnu, Maruthamputhur

Thiru. Mahavishnu stated that this meeting is being conducted for the renewal of the license of an operating stone quarry. He said that the people who spoke here mentioned the benefits provided by the quarry to the village, and they welcome those benefits. However, he pointed out that such welfare measures should actually be carried out by the Central and State Governments. Instead, the meeting appears to be praising actions carried out by companies that operate beyond the limits of the law. He further stated that more than 3,000 families and over 10,000 livestock live in Maruthamputhur village, and he questioned what arrangements have been made to protect them. He also said that agricultural lands in the area are getting affected and that some of the agricultural lands are being acquired by threatening people. He demanded that the quarry should be properly investigated. He also pointed out that the 6 km road from Maruthamputhur to Mukkoodal is completely covered with dust. He explained that when vehicles try to overtake trucks carrying heavy loads, the dust emitted from those vehicles spreads so much that it becomes difficult to move forward, causing great inconvenience to the public.

Therefore, he suggested that the public hearing meeting shall be conducted in Maruthamputhur to decide whether permission should be granted to the project or not. He also emphasized that the impacts are mainly affecting the people of Maruthamputhur, and not those who have come from other villages.

7. Thiru. Balu alias Chinnathambi, Marxist Communist Party, Tenkasi District Committee Member

Thiru. Balu stated that he is not against development and that development is necessary. However, he emphasized that such development must remain under the control of the government. He pointed out that, in the case of quarries, the government has lost its control. He explained that quarrying activity is done to depths many times greater than the depth permitted by the government, yet the government has not monitored these activities so far. He also questioned whether the Tamil Nadu Pollution Control Board (TNPCB) conducts survey regarding pollution levels due to the quarrying activities, and whether the results of such surveys are made known to the public. He further stated that there are regulations that minerals should not be transported in vehicles with more than 10 tyres, but these rules are being violated. He also alleged that minerals are being extracted in quantities far greater than the limits permitted by the government, and that the government is not monitoring this. He pointed out that heavy vehicles carrying excessive loads travel on rural roads, even though the government itself has enacted laws prohibiting such overloaded heavy vehicles from using village roads. Despite this, the rules continue to be violated.

Therefore, he said that he considers this public consultation meeting to be merely a formality or eyewash. He stated that although the meeting is being conducted because the law requires authorities to hear public opinions, in most cases the views expressed by the public are not actually accepted. He further said that thousands of lands have been affected by dust and that quarry activities are causing environmental damage and affecting water resources. He also questioned what action the government is taking when quarrying activities are carried out beyond the permitted depth in many places. Regarding whether quarries are necessary or not, he stated that quarries are required but only under government control. He insisted that the government itself should operate the quarries and

should not grant permissions to private individuals. According to him, when private individuals are given quarry licenses, they often operate with a profit motive without considering the welfare of the public or the environment. Therefore, he requested that quarries should be operated under government control.

8. Tmt. Chitra, Odaimarichan Village

Tmt. Chitra stated that her husband has been working in the said quarry for the past five years, and that the quarry has created employment opportunities. She mentioned that in many families, disputes and conflicts often arise when men remain at home without going to work. However, since the quarry is located in this area, many men are able to find employment, and therefore many families benefit from it. She also mentioned that she recently saw a news report stating that Tirunelveli district ranks first for staying without pollution.There are 5 quarries in her area and how it can be ranked first in controlling pollution despite having these quarries. Therefore, she said that quarries do not necessarily cause environmental pollution. She further stated that in any activity there will always be both good and bad aspects, and that people should set aside the negative aspects and accept the positive ones. She also said that the quarry owners treat the workers like members of their own family and even participate in auspicious and sad events happening in the workers houses.

9. Thiru. Ravichandran, Maruthamputhur

Thiru. Ravichandran stated that he has been working in the said quarry for the past eight years. He said that the quarry has not caused any environmental damage and that the quarry is the main source of his livelihood. Therefore, he requested that permission be granted for establishing the quarry at the said location.

10. Thiru. Karuppaiah, Kasinathapuram

Thiru. Karuppaiah stated that this meeting is a public hearing meeting to hear the opinions of the people. However, he said that the meeting is being conducted like a political party meeting and the Government and Government officials are being criticized. He further stated that because of this quarry, many people in the village

have obtained employment. In addition, lorry owners and drivers are also benefiting from the quarry. He also mentioned that the quarry management has provided drinking water facilities to the school located in their village. Therefore, he stated that neither the people of their village nor the public present have any objection to the quarry being established. Hence, he requested that permission be granted for the quarry.

11. Thiru. Jesu Raja, Ramnagar

Thiru. Jesu Raja stated that he has been working as a driver in the said quarry for the past seven years. He said that their livelihood depends on this quarry. He also mentioned that the quarry management takes good care of them by conducting medical check-ups once a month. He further stated that the quarry provides employment to many people and therefore requested that permission be granted for the quarry.

12. Thiru. Manikandan, Ramnagar

Thiru. Manikandan stated that the quarry provides many employment opportunities to the people of this region. He also mentioned that during the COVID period, even when the quarry was not operating, the quarry owners provided rice and financial assistance to the workers. He also mentioned that they have been helping schools in the villages and repairing potholes on the roads. Therefore, he requested that permission be granted for the quarry.

13. Thiru. Masanamuthu, Kasinathapuram

Thiru. Masanamuthu stated that he has been working in the said quarry for the past five years. He said that the quarry provides employment opportunities to many people and that the quarry management has been providing necessary help to the schools in the village.

14. Tmt. Kannagi, Kasinathapuram

Tmt. Kannagi stated that there are no problems due to the quarry. She also mentioned that many public welfare activities are being carried out by the quarry owner.

15. Thiru. Naveen, Kandampatti

Thiru. Naveen stated that since the quarry is located in this area, it provides employment opportunities to many people. He also mentioned that many individuals from his area are working in the quarry. Therefore, he requested that permission be granted for the quarry.

16. Thiru. Murugesan, Udayampuli

Thiru. Murugesan stated that because of the quarry, raw materials are easily available, and they are also available at lower prices. Therefore, he said that they have no objection to establish the quarry.

17. Thiru. Jyothibasu, Maruthamputhur

Thiru. Jyothibasu requested that permission should not be granted for this quarry. He stated that most of the people who spoke in favor of the quarry were from other villages, and none of them were from their village. He pointed out that it is the people of their village who are greatly affected by the heavy vehicles from the quarry.

He also mentioned that water is not being sprinkled on the roads to control the dust and he warned that if permission is granted for the quarry, protests will be organized on behalf of their village.

18. Thiru. Balanandan, Advocate, Maruthamputhur

Thiru. Balanandan stated that among the villages in Alangulam, Maruthamputhur has the smallest geographical area compared to other villages. However, despite having such a small area,for about 6 quarries license is expired and 3 qurries are under operation. Adding this quarry, there are 10 quarries. He said that most of the people who came to express their opinions in this meeting are

from outside villages, whereas only about 10 people from Maruthamputhur have attended. He also stated that no one from Maruthamputhur came to support the quarry. He pointed out that while people from outside villages say that about 10 families benefit from the quarry, agriculture is affected for 30 families because of it. He further stated that during blasting activities in the quarry, stones fall onto palm trees, causing them to wither and die. Therefore, he requested that the stone quarry should not be permitted.

19. Tmt. Jebakkani, Social Activist and Environmental Activist, Samadhanapuram

Tmt. Jebakkani stated that she has been working for many years as both a social activist and an environmental activist. She said that many of the people who spoke here discussed both the advantages and disadvantages of the quarry. She mentioned that in 2018, the government introduced a law which states that the opinions of social activists like them must also be submitted in the form of a letter. Based on that provision, she said that she had come to express her opinion with proper permission. She further stated that industries are definitely necessary for a village. If a stone quarry is established, it will make it easier to obtain materials needed for constructing buildings and also for construction of roads. She also mentioned that the government has enacted a law prohibiting the extraction of sand. Therefore, she said that such quarries are necessary for construction of housesand other construction works. She added that such quarries also create employment opportunities for people in the surrounding villages. Therefore, she requested that permission be granted for the proposed stone quarry.

20. Thiru. Pathirakali, Maruthamputhur

Thiru. Pathirakali stated that his house is located on the main road. He said that during both day and night, the movement of vehicles is there and the dust generated from them causes serious disturbances. If a vehicle is left outside even for about 10 minutes, it becomes covered with a large amount of dust. He also stated that due to this vehicular movement, many people are experiencing health problems. Therefore, he requested that permission should not be granted for the stone quarry.

Then, the District Environmental Engineer, Tenkasi requested if public opinion to be made if any and also requested the public to submit the written petitions, if any. A total of about 67 petitions were received during the public hearing.

As no public came forward to record their views, she thanked everyone and the meeting came to an end.

Annexure:

1. Press release Notice (Tamil & English) **(Annexure I)**
2. Copy of Attendance (Total - 32 Pages, 305 Participants) **(Annexure II)**
3. Pen drive consisting of the Recorded Video of the entire public hearing. **(Annexure III)**
4. Written Petitions received from the public for this proposed Project-67 Nos **(Annexure IV)**

14/03/26

District Environmental Engineer (FAC),
Tamilnadu Pollution Control Board,
Tenkasi.

14/03/26

Sub Collector,
Tenkasi.

(4)

<u>தென்காசி மாவட்டம், ஆலங்குளம் வட்டம், மருதம்புத்தூர் பகுதி-1 கிராமம், புல எண்கள். 36/1, 36/2B, 36/4B2, 36/4C, 37/1B2, 37/1E மற்றும் தென்காசி மாவட்டம், ஆலங்குளம் வட்டம், மருதம்புத்தூர் பகுதி-2 கிராமம், புல எண்கள் 145/1C, 145/1D, 145/1E, 146/9E, 146/9F, 146/9G, 147/1, 147/2A, 147/2B, 147/3A, 147/3B, 147/4C, 147/5F, 147/5H, 147/8B, 147/9C & 148/1- ல் அமையவுள்ள திரு. K. பிரசாத்ராஜீ அவர்களின் முன்மொழியப்பட்ட ரப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி (விஸ்தீரனம் 5.99.05 ஹெக்டேரில்) திட்டம் குறித்து 26.02.2026 அன்று காலை 11.00 மணியளவில், தென்காசி மாவட்டம், ஆலங்குளம் வட்டம், காளத்திமடம், அம்பை ரோடு, எண். 7/153, தி/ள். சந்திராட்டியர் மஹாலில் வைத்து நடைபெற்ற பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தின் குறிப்புகள்.</u>

<u>இக்கூட்டத்தில் பங்கு பெற்றவர்களின் விபரம்</u>

1.	திருமதி. வைஷ்ணவி பால், இ.ஆ.ப.	-	சார் ஆட்சியர், தென்காசி
2	திருமதி. S.R. சங்கீதா, எம்.இ,	-	மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (முழு கூடுதல் பொறுப்பு), தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தென்காசி.
3.	திரு. மு. தமிழ் செல்வன்	-	உதவிப் பொறியாளர், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தென்காசி.
4.	செல்வி. மு. சண்முகஸ்ரீ ரேவதி	-	உதவிப் பொறியாளர், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தென்காசி.
3.	பொதுமக்கள் மற்றும் அரசு அதிகாரிகள் (விபரம் இணைக்கப்பட்டுள்ளது - இணைப்பு-II)		

*****

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் வட்டம், மருதம்புத்தூர் பகுதி-1 கிராமம், புல எண்கள். 36/1, 36/2B, 36/4B2, 36/4C, 37/1B2, 37/1E மற்றும் தென்காசி மாவட்டம், ஆலங்குளம் வட்டம், மருதம்புத்தூர் பகுதி-2 கிராமம், புல எண்கள் 145/1C, 145/1D, 145/1E, 146/9E, 146/9F, 146/9G, 147/1, 147/2A, 147/2B, 147/3A, 147/3B, 147/4C, 147/5F, 147/5H, 147/8B, 147/9C & 148/1- ல் அமையவுள்ள (விஸ்தீரனம் 5.99.05 ஹெக்டேரில்) திரு. K. பிரசாத்ராஜீ அவர்களின் உத்தேசிக்கப்பட்ட கல் மற்றும் கிராவல் குவாரிக்கு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையின் கீழ் அப்பகுதி பொதுமக்களின் கருத்தினை அறிய பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டமானது, தென்காசி மாவட்டம்,

ஆலங்குளம் வட்டம், காளத்திமடம், அம்பை ரோடு, எண். 7/153, தி/ள். சந்திராட்டியர் மஹாலில் வைத்து 26.02.2026 அன்று காலை 11.00 மணியளவில் துவங்கியது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தென்காசி அவர்கள் பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு தலைமையேற்க வருகை புரிந்த சார் ஆட்சியர், தென்காசி அவர்களையும் மற்றும் கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றார். மேலும் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் நடைபெறும் விபரம் குறித்து ஏற்கனவே 23.01.2026 நாளிட்ட தினமலர் மற்றும் நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தாகவும் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்துவது தொடர்பாக குவாரி அமையவுள்ள அருகில் உள்ள கிராம பொதுமக்களுக்கு தெரிவிக்கும் பொருட்டு கடந்த 23.02.2026 அன்று துண்டு பிரசுரங்கள், வாகன பிரச்சாரம் மூலம் அறிவிப்பு செய்யப்பட்டிருந்தாகவும் தெரிவித்தார்.

இந்த குவாரி குறித்த தகவல்களை அதன் ஆலோசகர் விளக்குவார் என்று தெரிவித்தார். மேலும் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ தெரிவிக்கலாம் எனவும், தெரிவிக்கப்படும் கருத்துக்கள் அனைத்தும் வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட கருத்துக்கள் அனைத்தும் சென்னையிலுள்ள மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பிட்டு ஆணையத்திற்கு தக்க நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவித்தார்.

தொழிற்திட்டம் தொடர்பான விளக்கங்களை, மேற்படி தொழிற் நிறுவனம் சார்பில் பொதுமக்களிடம் விளக்குமாறு கேட்டுக்கொண்டதை தொடர்ந்து, திரு. K. பிரசாத்ராஜீ அவர்களின் உத்தேசிக்கப்பட்ட கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர், அமையவுள்ள திட்டம் தொடர்பாக புள்ளி விளக்க காட்சி (Power Point Presentation) மூலம் விவரமாக பொதுமக்களுக்கு விளக்கினார்.

திட்டம் குறித்து சுற்றுச்சூழல் ஆலோசகர் விளக்கம் அளித்துக் கொண்டிருக்கும் பொழுது கூட்டத்தில் சிறு சலசலப்பு ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து சார் ஆட்சியர் அவர்களும் அதிகாரிகளும் மற்றும் காவல் துறையினரும் அவர்களை சமாதானப்படுத்திய பின்பு மீண்டும் திட்டம் குறித்து சுற்றுச்சூழல் ஆலோசகர் விளக்கம் அளித்ததைத் தொடர்ந்து, இககூட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட குவாரி குறித்து வாய்மொழியாக பொதுமக்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு.

1. திரு. S.S.N பாஸ்கர், மருதம்புத்தூர்

குவாரி குறித்து கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்தும் பொழுது குவாரி அமையவுள்ள கிராமத்தில் தான் நடத்தப்பட வேண்டும் என தெரிவித்தார். மேலும் துண்டு பிரசுரங்கள் மூலம் ஆட்டோவில் விளம்பரம் செய்யப்பட்டுது எனக் கூறுவது அப்பட்டமான பொய் எனவும் தெரிவித்தார். இக்கருத்துக்கேட்புக் கூட்டம் தொடர்பாக சம்பந்தப்பட்ட வருவாய் ஆய்வாளர் அவர்களிடம் கேட்கும் பொழுது தமக்கு ஏதும் தெரியாது என்று அவர் தெரிவித்ததாக கூறினார். மேலும் அவர் கூறுகையில் ஆள் வைத்து பணம் கொடுத்து ஆட்கள் அழைத்து வரப்பட்டுள்ளதாகவும் குவாரியில் கம்பரஸர் வைத்து தான் குழி போட வேண்டும். ஆனால் இவர்கள் போர் வண்டியை வைத்து குழி போடுகிறார்கள் எனவும், அதனால் வீடுகளில் விரிசல்கள் விழுவதாகவும் தெரிவித்தார். மேலும் அதிகமான குவாரி பணிகள் செய்வதால் கிராமத்தில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுவதாகவும் தெரிவித்தார். குறிப்பிட்ட ஆழத்தை விட அதிகமான ஆழத்துடன் குவாரி பணிகள் செய்வதாகவும் போர்க்குழி போடுவதற்கு அனுமதி உள்ளதா எனவும் வினவினார்.

மேலும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் வண்டிகளில் பாரம் ஏற்றக்கூடாது என விதிகள் இருக்கும் பொழுது, பெரிய டாரஸ் வண்டிகளில் அதிகமான பாரம் ஏற்றிச் செல்வதால் தங்கள் ஊர் மிகவும் பாதிக்கப்படுகிறது எனவும் தெரிவித்து, அனுமதி வழங்க கூடாது என கேட்டுக்கொண்டார்.

2. திரு. சேர்மன் ராஜா, 1வது வார்டு உறுப்பினர், மருதம்புத்தூர்.

திரு. சேர்மன் ராஜா அவர்கள் தமது கருத்தினை தெரிவிக்கும் பொழுது, குவாரி அமையவுள்ள கிராமத்தில் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தினை நடத்தாமல் 5 கி.மீ தூரத்திற்கு அப்பால் அமைந்திருக்கும் இந்த இடத்தில் கருத்துக் கேட்புக் கூட்டத்தை நடத்துகிறார்கள் என வினவினார். மேலும் கருத்துக் கேட்புக் கூட்டம் தொடர்பாக எவ்விதமான முன்னறிவிப்பும் கொடுக்கப்படவில்லை எனவும் தெரிவித்தார். மேலும் மேற்படி குவாரியானது 24 மணி நேரமும் இயங்குவதாகவும், மேலும் கேரளாவிலிருந்து வண்டி வண்டியாக வருவதாகவும் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்துள்ள குவாரிகள் கூட தங்கள் ஊர் வழியாக கற்களை ஏற்றி செல்வதாகவும் தெரிவித்து, அதனால் சாலைகள் பழுதடைவதாகவும் தெரிவித்தார். 50 முதல் 60 டன் வரை பாரம் ஏற்றிச் செல்வதாகவும் குறிப்பிட்டார். அதனால் சாலைகளில் பெரும் புழுதி பறப்பதாகவும் அதைக் கட்டுப்படுத்த குவாரி உரிமையாளர்கள் தண்ணீர் தெளிப்பது கிடையாது எனவும் தெரிவித்தார். மேலும் மேற்படி குவாரி உரிமையாளர் தமது குவாரி பயன்பாட்டு நிதியில் இருந்து மருதம்புத்தூர் ஊரின் உட்கட்டமைப்பிற்கோ மற்றும் அதில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கோ அல்லது பொதுப் பயன்பாட்டுக்கோ எந்த விதமான நிதியும் வழங்கவில்லை

எனவும் தெரிவித்தார். மேலும் 24 மணி நேரமும் குவாரி இயங்குவதாகவும் எனவே, பகலில் குவாரி பணிகளை செய்யக் கூடாது எனவும் இரவில் குவாரி பணிகள் செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தார். ரோட்டில் தூசிகளை கட்டுப்படுத்துவற்கு தண்ணீர் தெளிப்பான்களை பயன்படுத்த சொல்ல வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். ரோட்டோரத்தில் அமைந்துள்ள வீடுகள் மற்றும் ரோட்டில் உள்ள அனைத்து செடிகளையும் சார் ஆட்சியர் அவர்கள் பார்க்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். மக்களுக்கு அடிப்படை வசதிகள், உட்கட்டமைப்பு எதுவும் செய்யவில்லை எனவும் தெரிவித்தார். பாதிக்கப்படும் கிராம மக்கள் தான் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கருத்துக்களை சொல்லலாமா அல்லது யார் வேண்டுமானாலும் கருத்துக்களைக் கூறலாமா எனவும் வினவினார். எனவே இந்தக் கருத்துக் கேட்புக் கூட்டத்தை இன்னொரு முறை மருதம்புத்தூரில் வைத்து நடத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். மேலும் அங்கே இக் கூட்டத்தை நடத்தினால் எவ்வளவு எதிர்ப்பு இருக்கிறது என்பது தெரியும் எனவும் கூறினார்.

நிலத்தடி நீர் பாதிக்கப்படுவதாகவும், முன்னர் எல்லாம் 100 அடிக்குள் தண்ணீர் கிடைத்து வந்ததாகவும் தற்பொழுது 500 அடிக்கு மேல் ஆழ்துளை கிணற்றில் தண்ணீர் இல்லாத நிலை உள்ளதாகவும் இன்னும் 15 ஆண்டுகளில் தங்கள் ஊரில் தண்ணீர் இல்லாமல் மக்கள் வெளியூர் செல்லும் நிலைக்கு ஆளாக நேரிடும் எனவும் எந்த விவசாயமும் செய்ய முடியாது எனவும் தெரிவித்தார். தமது ஊரில் எவ்விதமான கால்வாய் பாசனமும் கிடையாது எனவும் வானம் பார்த்த பூமியாக உள்ளது எனவும், மழை பெய்தால் மட்டும் தான் குளத்திற்கு தண்ணீர் வரும் எனவும் அதை வைத்து விவசாயம் செய்ய முடியும் எனவும் தெரிவித்தார். தமது பகுதி மக்கள் எல்லோரும் விவசாயிகள் இல்லை என்றும் அன்றாடம் கூலி வேலை பார்த்துதான் மக்கள் பிழைப்பு நடத்தி வருவதாகவும் தெரிவித்து, இன்னொரு முறை மேற்படி கருத்துக் கேட்புக் கூட்டத்தை மருதம்புத்தூரில் நடத்த வேண்டும் எனவும், அவ்வாறு நடைபெறும் பட்சத்தில் தங்கள் பகுதி மக்கள் ஆதரவு தெரிவித்தால் மேற்படி குவாரிக்கு அனுமதி வழங்க எவ்வித ஆட்சேபனையும் இல்லை எனவும் தெரிவித்தார். எனவே இந்தக் கருத்துக் கேட்புக் கூட்டத்தை மாற்றி மருதம்புத்தூர் ஊராட்சிக்கு உட்பட்ட பகுதியில் ஒரு முறை நடத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

3. திரு. கணேசன், காசிநாதபுரம்

திரு. கணேசன் தமது கருத்தினை தெரிவிக்கும் பொழுது, மேற்படி குவாரியிலிருந்து கடந்த 3 ஆண்டு காலமாக கேரளா மாநிலத்திற்கு எந்த லோடு ஏற்றுமதி செய்வது கிடையாது எனவும், மேற்படி குவாரியிலிருந்து கிடைக்கும் அனைத்து பொருட்களும் உள்ளூர் வண்டிகளுக்கு மட்டுமே வழங்கி வருவதாகவும் தெரிவித்தார். மேற்படி குவாரியால்

100 குடும்பங்கள் வாழ்வாதரம் பெற்று வருவதாகவும் எனவே மேற்படி குவாரி அமைவதற்கு அனுமதி வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

4. திருமதி. பூமா, உடையாம்புளி

திருமதி பூமா அவர்கள் தமது கருத்தினை தெரிவிக்கும் பொழுது, எந்த ஒரு திட்டத்திலும் நல்லது மற்றும் தீயன ஆகிய இரு விஷயங்கள் இருக்கும் என்றும், அவற்றில் நாம் நல்லதை மட்டுமே எடுத்துக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார். தீயவற்றிலிருந்து எவ்வாறு வெளியேறுவதற்கு என்னென்ன வழிமுறைகளை பின்பற்ற வேண்டும் என தெரிந்து அதன்படி நடந்து கொள்ள வேண்டும் எனவும் கூறினார். தனது கணவர் 7 வருடமாக குவாரியில் வேலை செய்து வருவதாகவும், குவாரியில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு தூசி பாதிப்பு ஒவ்வாமை பாதிப்பு வராமலிருக்க தண்ணீர் தெளிப்பான்களை முறையாக பயன்படுத்தி வருவதாக கூறினார். மேலும் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் நலன் கருதி ஆரோக்யமான உணவுகளை வழங்கி வருவதாகவும் தெரிவித்து, தமது பணியாளர்களின் நலனில் அக்கறையுள்ள அவர்கள் குவாரி அமைந்துள்ள பகுதியைச் சுற்றியுள்ள கிராம மக்கள் மீதும் அக்கறை செலுத்துவார்கள் எனவும் கூறினார். மேலும் தற்பொழுது மருதம்புத்தூரில் அமைந்துள்ள பள்ளியின் வளர்ச்சிக்காக ரூ.5.0 இலட்சம் நிதி ஒதுக்கியிருப்பபதாகவும் தெரிவித்தார். குவாரி உரிமையாளர்கள் தங்கள் பணியளர்களை எந்த அளவிற்கு அக்கறை செலுத்துகிறார்களோ அந்த அளவிற்கு கிராமத்திலுள்ள மக்கள் மீதும் அக்கறை செலுத்துவார்கள். எனவே குவாரியினால் எந்த விதமான தீங்கும் ஏற்படாமல் பார்த்துக்கொள்வார்கள் எனவும் தெரிவித்தார். மேலும் எந்த அளவிற்கு மரங்கள் வைக்கிறார்களோ அந்த அளவிற்கு மாசினை கட்டுப்படுத்தும் எனவும் தெரிவித்து, எந்த ஒரு தொழிற்நுட்பத்திலும் நன்மையும் உண்டு, தீமையும் உண்டு என தெரிவித்து அதனை எவ்வாறு கடக்க வேண்டும் என்று நாம் பார்க்க வேண்டும் எனக் கூறினார். மேலும் தற்பொழுது கட்டுமானப் பணிகள் பெரிய அளவில் நடைபெற்று வருவதாகவும் குவாரி அமையாமல் போனால், அக்கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான பொருட்களை எங்கிருந்து வாங்குவது என்றும் தெரிவித்து இந்தக் குவாரி எந்த வெளி மாநிலத்திற்கும் தமது உற்பத்தி பொருட்களை ஏற்றுமதி செய்வது கிடையாது எனவும் அனைத்தும் நமது மாநிலத்திற்கு மட்டும் விற்பனை செய்து வருவதாகவும் கூறினார். எனவே மேற்படி திட்டத்திற்கு அனுமதி வழங்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

5. திரு. மாங்கன், ஓடைமறிச்சான்

தமது உரையில் எந்த ஒரு தொழில் செய்தாலும் நன்மை, தீமை இரண்டும் இருக்கும் எனவும், இவற்றில் நன்மை எது தீமை எது என கண்டறிந்து அதிகாரி அவர்கள் பரிசீலனை

செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டார். ஏதாவது ஒரு இடத்தில் தேவையான பொருட்கள் உற்பத்தி செய்தால் தான் மக்கள் விரும்பும் வீடுகளை கட்ட இயலும். மேலும் அரசு பள்ளிக்கு கழிப்பிடம் கட்டி தருவதாக விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. அரசு பள்ளிக்கூடத்திற்கு மட்டுமல்ல அரசு உதவி பெறும் பள்ளிக்கூடத்திற்கும் தேவையானவற்றை நிர்வாகம் சார்பில் செய்து கொடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். எனவே மக்களுக்கு தீமை வராத அளவிற்கு நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும என்றும் இக்குவாரிக்கு அனுமதி வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

<u>6. திரு. மகாவிஷ்ணு, மருதம்புத்தூர்</u>

ஏற்கனவே அனுமதி பெற்று இயங்கி வரும் கல்குவாரியின் உரிமத்தை புதுப்பிக்கும் விதமாக இங்கு கூட்டம் நடந்து கொண்டுள்ளது என்றும், அந்த கிராமத்தில் மேற்படி நிறுவனம் சார்பில் செய்து கொடுத்த நன்மைகளை எல்லாம் இங்கு பேசிய ஊர் மக்கள் கூறினார்கள் நாங்கள் அதை வரவேற்கிறோம் எனவும் தெரிவித்தார். ஆனால் மேற்படி நன்மையெல்லாம் மத்திய மாநில அரசுகள் தான் செய்ய வேண்டும். ஆனால் சட்டத்திற்கு அப்பால் தொழில் செய்யும் நிறுவனங்கள் செய்யும் விஷயங்களை பெருமை பேசும் விஷயமாக இந்த ஆய்வு கூட்டம் நடந்து கொண்டு இருக்கிறது எனவும் கூறினார். மேலும் மருதம்புத்தூரில் சுமார் 3000-க்கும் அதிகமான குடும்பங்களும் 10000-க்கும் அதிகமாக கால்நடைகளுக்கும் வசித்து வருகின்றன என்றும், அவற்றை பாதுகாக்க என்ன ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. மற்றும் விவசாய நிலங்களும் பாதிக்கப்பட்டு வருகின்றன. மேலும் அங்குள்ள விவசாய நிலங்கள் மிரட்டி வாங்கப்படுகின்றன. மேற்படி குவாரி ஆய்வு செய்யப்பட வேண்டும் எனவும், மருதம்புத்தூரிலிருந்து முக்கூடல் செல்லும் 6 கி.மீ தொலைவு சாலைகள் முழுவதும் தூசி பறக்கிறது எனவும் தெரிவித்தார். ஒரு வாகனத்தை பின் சென்று முன்னேற வேண்டுமென நினைத்தால் முன்னால் பாரம் ஏற்றி செல்லும் வண்டிகளில் இருந்து வெளியேறும் தூசிகளால் நமது வாகனத்தை முன்னே செல்வதற்கு வழி இல்லாமல் தூசி பரவுவதால் பொதுமக்கள் இன்னல் அடைகிறார்கள். எனவே மேற்படி திட்டத்திற்கு அனுமதி கொடுப்பதா? வேண்டாமா என்பதை மருதம்புத்தூரில் இக்கூட்டம் நடத்தி முடிவு செய்து கொள்ளலாம் எனவும் கேட்டுக்கொண்டார். பாதிப்பு என்பது பெரும்பாலும் மருதம்புத்தூர் பகுதியைச் சார்ந்த மக்களுக்கு தான் உள்ளதே தவிர பிற ஊர்களிலிருந்து வந்திருக்கும் மக்களுக்கு அல்ல எனவும் தெரிவித்தார்.

7. திரு. பாலு என்ற சின்னத்தம்பி, மார்க்சிஸ்ட் கம்னியூஸ்ட் கட்சி, தென்காசி மாவட்ட குழு உறுப்பினர்.

தம்மைப் பொறுத்த வரையில் வளர்ச்சிக்கு தாம் எதிரி இல்லை எனவும், வளர்ச்சி என்பது வேண்டும் எனவும், ஆனால் அது அரசின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். குவாரிகளை பொறுத்த வரையில் அரசு தனது கட்டுப்பாட்டை இழந்து உள்ளது என்றும் குறிப்பிட்டார். காரணம் அரசு அனுமதி அளித்த அளவை விட பன் மடங்கு ஆழத்திற்கு குவாரி தோண்டப்படுகிறது எனவும், ஆனால் அரசு இது வரை அவற்றை கண்காணிக்கவில்லை என்பதை தெளிவாக சொல்ல முடியும் என்றும் கூறினார். மேலும், குவாரியில் கனிமங்களை வெட்டி எடுக்கும் பொழுது, அவற்றை கையாளும் பொழுது மாசு அளவுகள் குறித்து, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் ஆய்வு செய்யப்படுகிறதா? ஆய்வின் முடிவுகள் மக்களுக்கு தெரியப்படுத்தப்படுகிறதா எனவும் வினவினார். மேலும் கனிம வளங்களை 10 டயர்களுக்கு அதிகமான வண்டிகளில் பாரம் ஏற்றிச் செல்லக் கூடாது என உத்திரவுகள் இருந்தும் அவைகள் மீறப்படுகின்றன எனவும் தெரிவித்தார். மேலும் அரசு அனுமதி வழங்கியுள்ள அளவினை விட பல மடங்கு அளவுள்ள கனிமங்கள் வெளியேற்றப்படுகின்றன எனவும் தெரிவித்தார். ஆனால் அரசு அதை கண்காணிப்பது கிடையாது எனவும், மேலும் அதிக பாரம் ஏற்றிச் செல்லும் கனரக வாகனங்கள் கிராமபுறச் சாலைகளில் சென்று வருகிறது. அதிக பாரம் ஏற்றிச் செல்லும் கனரக வாகனங்கள் கிராமச் சாலைகளில் செல்லக் கூடாது என அரசு தான் சட்டம் இயற்றியுள்ளது. ஆனால் அவைகள் மீறப்படுகின்றன எனவும் தெரிவித்தார். எனவே இந்தக் கருத்துக் கேட்புக் கூட்டமானது ஒரு கண்துடைப்புக் கூட்டம் என தாம் கருதுவதாகவும் தெரிவித்தார். பொதுமக்களின் கருத்துக்களை கேட்க வேண்டும் என சட்டம் இருப்பதால் தாங்கள் இந்தக் கருத்து கேட்பினை நடத்துவதாகவும், ஆனால் பொதுமக்களின் பெரும்பாலான கருத்துக்கள் தங்களால் ஏற்றுக்கொள்ளப்படுவது இல்லை எனவும் தெரிவத்தார். மேலும் பல்லாயிரக்கணக்கான நிலங்கள் மாசுவினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். குவாரிப் பணிகளால், சுற்றுச்சூழல் பாதிப்பு, நீர் ஆதாரங்கள் அனைத்தும் பாதிக்கப்படுகின்றன எனவும் கூறினார். குவாரிப் பணிகளுக்கு வழங்கியுள்ள ஆழத்திற்கு பதிலாக பல இடங்களில் அளவுக்கு அதிகமான ஆழத்தில் வெட்டி எடுக்கிறார்கள், இதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கிறது எனவும் கேள்வி எழுப்பினார். குவாரி வேண்டுமா? வேண்டாமா? என்றால் அரசு கட்டுப்பாட்டில் குவாரி வேண்டும் என தெரிவித்தார். குவாரிகளை அரசே ஏற்று நடத்த வேண்டும் எனவும், தனி நபர்களுக்கு அரசு அனுமதி வழங்கக் கூடாது எனவும் தெரிவித்தார். தனி நபர்களுக்கு குவாரி அனுமதி வழங்கும் பொழுது, பொது மக்களைப் பற்றியோ, சுற்றுச்சூழல் பற்றியோ சிந்தனையில்லாமல், இலாப நோக்கத்துடன் மட்டுமே செயல்படுவார்கள் எனவும் கூறினார். எனவே அரசு கட்டுப்பாட்டில் குவாரிகளை நடத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

8. திருமதி. சித்ரா, ஓடைமறிச்சான் கிராமம்.

தனது கணவர் கடந்த 5 ஆண்டு காலமாக மேற்படி குவாரியில் பணிபுரிந்து வருவதாகவும், மேற்படி குவாரியால் வேலை வாய்ப்பு ஏற்பட்டு உள்ளதாகவும், பெரும்பாலான குடும்பங்களில் பொதுவாக சண்டை சச்சரவுகள் ஏன் வருகிறது என்றால், ஆண்கள் வேலைக்கு செல்லாமல் வீட்டில் இருந்தால் தான் வரும் எனவும், ஆனால் மேற்படி குவாரி இந்தப் பகுதியில் அமைவதால் நிறைய ஆண்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் எனவும் என பல குடும்பங்கள் நன்மை பெறுவார்கள் எனவும் தெரிவித்தார். மேலும் தற்பொழுது ஒரு செய்தி பார்த்ததாகவும், மேற்படி செய்தியில் மாசடையாமல் இருப்பதில் திருநெல்வேலி மாவட்டம் முதலில் வருவதாகவும் தெரிவித்தார். மேலும் தங்களது பகுதியில் 5 குவாரிகள் உள்ளது எனவும், இப்படி இருக்கும்பட்சத்தில் எவ்வாறு திருநெல்வேலி மாவட்டம் மாசு கட்டுப்படுத்துவதில் முதலில் வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் வினவினார் ஒரு செயல் செய்யும் பொழுது நல்லதும் இருக்கும், கெட்டதும் இருக்கும். நாம் தான் கெட்டவற்றை தள்ளி வைத்து விட்டு நல்லதை எடுத்துக் கொள்ள வேண்டும் என தெரிவித்தார். மேலும் தமது குவாரியின் உரிமையாளர்கள் தொழிலாளர்களின் குடும்பத்தில் ஒருவராக முன்னின்று, தொழிலாளர்களின் குடும்ப சுப மற்றும் துக்க நிகழ்வுகளில் பங்கெடுத்து கொள்வார்கள் எனவும் தெரிவித்தார்.

9. திரு. இரவிச்சந்திரன், மருதம்புத்தூர்

தாம் மேற்படி குவாரியில் கடந்த 8 ஆண்டு காலமாக பணிபுரிந்து வருவதாகவும், குவாரியால் எந்த விதமான சுற்றுச்சூழலும் பாதிக்கப்படவில்லை எனவும், தமது வாழ்வாதரத்திற்கான வழி வகை மேற்படி குவாரியால் தான் கிடைக்கிறது எனவும், எனவே மேற்படி இடத்தில் குவாரி அமைவதற்கு அனுமதி வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

10. திரு. கருப்பையா, காசிநாதபுரம்

இங்கு நடக்கும் கூட்டமானது பொதுமக்களின் கருத்துக் கேட்புக் கூட்டம். ஆனால் இந்தக் கூட்டம் ஏதோ கட்சிக் கூட்டம் போன்று பேசுகிறார்கள். அரசினை பற்றியும், அரசு அதிகாரிகளைப் பற்றியும் குறைத்து பேசுகிறார்கள். இந்தக் குவாரி இருப்பதினால் ஊரில் பல நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்து வருகிறது. மேலும் லாரி உரிமையாளர்கள், ஓட்டுநர்கள் அனைவரும் மேற்படி குவாரியின் மூலம் பலன் அடைந்து வருகிறார்கள். மேலும் தமது ஊரில் அமைந்துள்ள பள்ளிக்கு குவாரியின் சார்பில் குடி தண்ணீர் வசதிகள் செய்து கொடுத்துள்ளார்கள் எனவும் தெரிவித்தார். எனவே மேற்படி குவாரி அமைவதற்கு தங்கள்

ஊரின் சார்பிலோ அல்லது வந்திருக்கும் பொதுமக்கள் சார்பிலோ எவ்வித ஆட்சேபனையும் இல்லை எனவும், எனவே குவாரி அமைவதற்கு அனுமதி வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

11. திரு. ஜேசுராஜா, ராம்நகர்

மேற்படி குவாரியில் தாம் ஓட்டுநராக 7 வருடமாக பணிபுரிந்து வருவதாகவும், இந்த குவாரியால் தான் தங்களுக்கு வாழ்வாதாரம் உள்ளதாகவும் மற்றும் மாதம் ஒருமுறை மருத்துவ பரிசோதனை செய்து எங்களை நன்றாக பார்த்துகொள்கிறார்கள் என்றும் குவாரியால் பல நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதாகவும், எனவே மேற்படி குவாரிக்கு ஆதரவு வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

12. திரு. மணிகண்டன், ராம்நகர்

மேற்படி குவாரியில் இந்தப் பகுதி மக்களுக்கு நிறைய வேலை வாய்ப்பு கிடைப்பதாகவும், மேலும் கொரோனா காலங்களில் குவாரி செயல்படாமல் இருந்த போதும் அங்கு வேலை செய்பவர்களுக்கு அரிசி மற்றும் பணஉதவிகள் செய்ததாகவும் மேலும் கிராமங்களில் உள்ள பள்ளிகளுக்கு நன்மை செய்து வருவதாகவும், ரோட்டில் ஏற்படும் குண்டு குழிகளை சரி செய்தும் கொடுத்து வருகிறார்கள் எனவும் குறிப்பிட்டார். எனவே மேற்படி குவாரிக்கு அனுமதி வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

13. திரு. மாசானமுத்து, காசிநாதபுரம்

மேற்படி குவாரியில் தாம் 5 ஆண்டு காலமாக பணிபுரிந்து வருவதாகவும், குவாரியால் பல நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதாகவும், மேலும் ஊரில் உள்ள பள்ளிகளுக்கு தேவையான உதவிகளை செய்து கொடுத்துக் கொண்டுள்ளனர்.

14. திருமதி. கண்ணகி, காசிநாதபுரம்

மேற்படி குவாரியால் எந்தவிதமான இடையூறுகளும் இல்லை எனவும், நிறைய பொது தொண்டுகள் குவாரி உரிமையாளர் மூலம் செய்யப்பட்டு வருகிறது என்று கூறினார்.

15. திரு. நவீன், கண்டம்பட்டி

மேற்படி குவாரியில் இந்தப் பகுதியில் அமைவதால் பல நபர்களுக்கு வேலை வாய்ப்பு அமையும் எனவும், தமது பகுதியில் இருந்து அதிகமான நபர்கள் மேற்படி குவாரியில் வேலை பார்ப்பதாகவும், எனவே மேற்படி குவாரிக்கு அனுமதி வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

16. திரு. முருகேசன், உடையாம்புளி

இந்தக் குவாரி அமைவதால் மூலப் பொருட்கள் எளிதாக கிடைக்கும் எனவும், விலையும் குறைவாக கிடைப்பதாகவும் எனவே குவாரி அமைவதால் எங்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை எனவும் தெரிவித்தார்.

17. திரு. ஜோதிபாசு, மருதம்புத்தூர்

இந்தக் குவாரிக்கு அனுமதி வழங்க வேண்டாம் எனவும், பேசிய பெரும்பாலான மக்கள் வெளியூர் மக்கள் எனவும், தங்கள் ஊர் மக்கள் யாரும் இல்லை எனவும் குறிப்பிட்டார். ஆனால் தங்கள் ஊர் மக்கள் தான் மேற்படி குவாரி கனரக வாகனங்களால் பெரிதும் பாதிக்கப்படுவதாக தெரிவித்தார். ரோட்டில் புழுதி பரவா வண்ணம் தண்ணீர் தெளிப்பது கிடையாது எனவும், எனவே குவாரிக்கு அனுமதி அளிக்கும் பட்சத்தில் தங்கள் ஊரின் சார்பாக போராட்டம் நடைபெறும் எனவும் தெரிவித்தார்.

18. திரு. பாலாநந்தன், வழக்கறிஞர், மருதம்புத்தூர்

ஆலங்குளம் பகுதியைப் பொறுத்தவரையில், அனைத்து ஊர்களைவிட பரப்பளவில் மிகக் குறைந்த பரப்பளவு கொண்ட ஊர் மருதம்புத்தூர் ஆகும். ஆனால் குறைந்த பரப்பளவு கொண்ட இந்தப் பகுதியில் இதுவரை சுமார் 6 குவாரிகளுக்கு உரிமம் முடிந்துவிட்டது. 3 குவாரிகள் செயல்பாட்டில் உள்ளது. இந்த குவாரியையும் சேர்த்து 10 குவாரிகள் உள்ளன. இந்தக் கூட்டத்திற்கு கருத்து சொல்ல வந்தவர்களில் பெரும்பாலும் வெளியூரைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். ஆனால் மருதம்புத்தூரிலிருந்து வெறும் 10 பேர்தான் வந்துள்ளோம். ஆனால் இந்தக் குவாரி அமைய வேண்டும் என கருத்துக் கூற மருதம்புத்தூரில் இருந்து யாரும் வரவில்லை. மேலும் வந்திருக்கும் வெளியூர் மக்கள் 10 பேரின் குடும்பங்கள் வாழ்வாதரம் பெறும் என்று பேசுகிறார்கள். ஆனால் 30 வீடுகளின் விவசாயம் பாதிக்கப்படுகிறது. குவாரியில் வெடி வைக்கும் பொழுது கற்கள் விழுந்து அனைத்து பனை மரங்களும் பட்டுப் போய்விட்டன என தெரிவித்தார். எனவே கல்குவாரி வேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டார்.

19. திருமதி. ஜெபக்கனி, சமூக ஆர்வலர் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர், சமாதானபுரம்

தாம் சுற்றுச்சூழல் ஆர்வலராகவும் மற்றும் சமூக ஆர்வலராகவும் பல ஆண்டுகளாக செயலாற்றி வருவதாக தெரிவித்தார். இங்கு பேசியவர்களில் குவாரியால் ஏற்படும் நன்மை மற்றும் தீமையைப் பற்றி நிறைய பேசினார்கள். கடந்த 2018-ஆம் ஆண்டு அரசு ஒரு சட்டம் கொண்டு வந்துள்ளது. மேற்படி சட்டத்தில் எங்களைப் போன்ற சமூக ஆர்வலர்களின் கருத்துக்களை ஒரு கடிதமாக சேர்க்க வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது எனவும் அதனடிப்படையில் தாம் அனுமதியுடன் தான் கருத்து கூற வந்திருப்பதாகவும் தெரிவித்தார்.

தொழிற்சாலை என்பது ஒரு கிராமத்திற்கு கட்டாயம் தேவை. கல்குவாரி அமைந்தால் தான் கிராமத்தில் கட்டிடங்கள் கட்டுவதற்கு வசதியாக இருக்கும். சாலைகள் அமைப்பதற்கும் வசதியாக இருக்கும். மண்ணை அள்ளக்கூடாது என அரசு சட்டம் இயற்றியுள்ளது. எனவே இது போன்ற கல் குவாரிகள் இருப்பதால் தான் வீடு மற்றும் கட்டுமானப் பணிகள் நடக்கிறது. மேலும் சுற்றியுள்ள கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே அமையவுள்ள கல்குவாரிக்கு அனுமதி வழங்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

20. திரு. பத்திரகாளி, மருதம்புத்தூர்

தம்முடைய வீடு மெயின் ரோட்டில் அமைந்துள்ளதாகவும், பகல் இரவு அனைத்து நேரங்களிலும் வண்டிகள் சென்று கொண்டிருப்பதால் ஏற்படும் தூசுகளால் பெரிதளவில் பாதிப்பு ஏற்படுவதாகவும், ஒரு 10 நிமிடங்கள் வாகனத்தை வெளியில் விட்டு விட்டு வந்து பார்க்கும் பொழுது பெரும் தூசிகளால் பாதிக்கப்படுகிறது எனவும் கூறினார். மேற்படி வாகன போக்குவரத்தால் பல நபர்களுக்கு உடல் நலம் பாதிக்கப்படுகிறது எனவும் தெரிவித்தார். எனவே கல்குவாரிக்கு அனுமதி வழங்க வேண்டாம் எனக் கேட்டுக்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, எழுத்துப் பூர்வமான மனுக்கள் ஏதேனும் அளிப்பதாக இருந்தால், இக்கூட்டத்தில் அளிக்கலாம் என மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர், தென்காசி அவர்கள் கூறியதைத் தொடர்ந்து மொத்தம் 67 மனுக்கள் பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தில் பெறப்பட்டது.

இறுதியில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தென்காசி அவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறியவுடன், பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் நிறைவுபெற்றது.

இணைப்பு:

1. பத்திரிக்கைச் செய்தி நகல்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) (இணைப்பு I)
2. வருகைப்பதிவேடு நகல் (மொத்தம் - 32 பக்கங்கள், 305 நபர்கள்) (இணைப்பு II)
3. பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் வீடியோ (ஒலி மற்றும் ஒளி) பதிவு (இணைப்பு III)
4. கருத்து கேட்பு கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து எழுத்துப்பூர்வமாக பெறப்பட்ட மனுக்கள் - 67 எண்ணங்கள்(இணைப்பு IV)

14/03/26

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,(முகூபொ)
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
தென்காசி.

14/03/26

சார் ஆட்சியர்,
தென்காசி.